# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 22 - 2023*

**கல்வி - 03.06.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45-11:15)**

தொடக்கநிலை, மழலையர் மற்றும் சிறுவர்நிலை மாணவர்களுக்கு வழமையான பாடசாலை இடம்பெறும்.

**அனைத்துலக ஆண்டிறுதித் தேர்வு 03.06.2023 - இடம்பெறும்.**

***தேர்வுக்கு வரும் மாணவர்கள் கவனத்திற் கொள்ளவேண்டிய சில முக்கிய விடயங்கள்.***

1. 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை அனைத்துலகத் தேர்வு இடம்பெறும்.
2. 1ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் அவர்களின் வகுப்பாசிரியர்கள் அவர்களுடன் தேர்வுக் கூடத்தில் நிற்பார்கள். ஏனைய வகுப்பினருக்கு வேறு வளாக ஆசிரியர்கள் மேற்பார்வையாளராகப் பணிபுரிவார்கள். எமது வளாக ஆசிரியர்கள் வேறு வளாகங்களில் மேற்பார்வையாளர்களாகப் பணிபுரிவார்கள்.
3. **தேர்வுக்குத் தேவையான பொருட்கள் கவனமாக எடுத்துவருதல்.** எ.கா. எழுதுகோல், அழிப்பான், எழுதுகோல் தீட்டி மற்றும் அடிமட்டம் போன்றவை.
4. **உணவுப்பொதி மற்றும் நீர் புத்தகப் பையுடன் கொண்டுவருதல்** (சிலவேளை தேர்வுக் கூடத்திலிருந்தவண்ணம் உணவருந்தவேண்டி வரலாம்.)
5. கட்டிடத்தினுள் பயன்படுத்தும் காலணிகள் எடுத்துவர வேண்டும்.
6. **கைத்தொலைபேசிகள் எடுத்துவருதல் முற்றிலும் தடை**. பெற்றோரிடம் அல்லது முழுமையாக நிறுத்திவிட்டு தேர்வுக்குமுன் மேற்பார்வையாளர் முன்னிலையில் வைத்தல்.
7. தேர்வு நேரத்தில் கழிவறை செல்லவேண்டிய மாணவர்கள் மேற்பார்வையாளருக்குத் தகவல் வழங்கவேண்டும்.
8. 2-4ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கேள்விகளின் தலைப்புகள் மற்றும் எ.கா. வாசித்துவிடப்படும். ஏனையவர்கள் தாமாக வாசித்தல் வேண்டும்.
9. ஐயப்பாடுகள் இருக்கும் மாணவர் அடுத்த மாணவர்களுக்கு இடையூறு இல்லாதவகையில் மேற்பார்வையாளர்களிடம் கைகளை உயர்த்தி தங்கள் முறைவரும்போது கேட்கலாம்.
10. **அகராதி பயன்படுத்த முடியாது.**
11. சுட்டெண் மேற்பார்வையாளர்களால் தேர்வுத்தாள்களில் எழுதப்படும்.
12. மாணவர்களுக்குத் தேவையான மேலதிக வெற்றுத்தாள்கள் மேற்பார்வையாளர்களால் வழங்கப்படும்.

13. தேர்வுத்தாள் கிடைத்தபின்பு விரைவாக விடையளித்து முடித்திருந்தாலும் குறைந்தது 60 மணித்துளிகள் (1மணித்தியாலம்) அம் மாணவன் அல்லது மாணவி தேர்வுக்கூடத்தில் இருத்தல் வேண்டும்.
14. தேர்வுசெய்து முடித்திருந்தாலும் வழங்கப்பட்ட நேரம்வரை மாணவர்கள் விடைத்தாளை மீள்பார்வை செய்துகொண்டிருப்பது சிறந்தது.

கடந்த ஆண்டுபோல் இல்லாமல் இவ்வாண்டு சில இடர்பாடுகளைத் தவிர்த்துத் தேர்வு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

அகவணக்கம் மற்றும் பாடசாலைக் கீதத்துடன் தேர்வுகள் தொடங்கும்.

**மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வுகளை எடுத்து, சிறந்த புள்ளிகளை பெறவேண்டுமென வாழ்த்துகின்றோம்.**

### கலை - 03.06.2023 சனிக்கிழமை

வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் அறியத்தருவார்கள்.

### அனைத்துலக அறிவாடல் போட்டி 2023

அனைத்து மாணவர்களும் பங்கேற்பது விரும்பத்தக்கது.
பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை போட்டிகளுக்குத் தயார்படுத்தவும்.

### சிற்றுண்டிச்சாலை இயங்குநிலையில் இருக்கும்.

*தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேநீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும்.*

**நிதி 2023** - அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் லோறன்ஸ்கூக் வளாகத்தின் முழுமை பெற்ற உறுப்பினர் விபரம் வைபர் குழுமங்களினூடாக கடந்த திங்கட்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

***அன்னை மின்னஞ்சல் கிடைக்காத அல்லது இல்லாத மாணவர்கள், விரைவாக தங்கள் வகுப்பாசிரியர்களினூடாக எமக்குத் தகவல் தரவும்.***

**கோடைகால ஒன்றுகூடல்** 10.06.2023 அன்று பாடசாலை நேரத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் விளையாட்டுப் போட்டிக்கான பணியாளர்களுடன் இடம்பெறும். அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**விளையாட்டுப்போட்டி** 11.06.2023

பதிவுகள் நிறைவுக்கு வந்துள்ளது.
அணிநடையில் பங்குகொள்ள விரும்பும் 5-10ஆம் வகுப்பு மாணவர்கள் , பதியத் தவறியிருந்தால் விளையாட்டுப் பொறுப்பாளரை மின்னஞ்சலினூடாகத் தொடர்புகொள்ளவும். danshiyas@annai.no

**விளையாட்டுப்போட்டிக்கான இவ்வாரப் பயிற்சிகள்**

இன்று வியாழக்கிழமை 18:00 இற்கு ஸ்ரொவ்னர் (Stovner) மைதானத்திலும்
ஞாயிற்றுக்கிழமை 18:00 இற்கு லில்லஸ்ரொம் (Lillestrøm) மைதானத்திலும் இடம்பெறும். அனைத்து மாணவர்களும் 10-15 மணித்துளிகளுக்கு முன்னதாக வருகை தரும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். மேலதிகப் பயிற்சிகள் தேவைப்படின் பின்பு அறியத்தரப்படும்.

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!